


15. 08. 2025

தலைப்பு செய்திகள்

நாட்டின் 79-வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

- பிரதமர் திரு. நரேந்திரமோடி டெல்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றிவைத்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.
- இளைஞர்களுக்கு ஒருலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேலைவாய்ப்பு திட்டம், சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள், நீர்வளங்கள் கண்டறியும் ஆழ்நீர் அகழ்வு பணிகள் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.
- சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்து 9 அறிவிப்புகளை வெளியிட்டார்.
- தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலலும் ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து தியாகிகளை கவுரவித்தனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

சுதந்திர தினம் - பிரதமர்

நாட்டின் 79-வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாகவும், உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.

79-வது சுதந்திர தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி தில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை இன்று ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

.. ஜன கன மன ..

தேசிய கொடி ஏற்றப்பட்டவுடன் 21 குண்டுகள் முழங்கின.

.. 21 குண்டுகள் ..

இதனைத் தொடர்ந்து மூவர்ண தேசிய கொடி மற்றும் ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கொடிகளுடன் வானில் வட்டமிட்ட இந்திய விமானப்படையின் இரண்டு ஹெலிகாப்டர்கள் ஒன்றன்பின் ஒன்றாக பறந்து தேசியகொடியின் மீது வண்ண வண்ண மலர்களை தூவின.

.. ஹெலிகாப்டர் ..

முன்னதாக செங்கோட்டை வந்த பிரதமருக்கு முப்படையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது

.. Red fort ..

தேசிய கொடியை பிரதமர் ஏற்றிவைத்த பின்னர் பேண்ட் வாத்தியங்களின் தேசிய ஒருமைப்பாட்டு பாடல் இசைக்கப்பட்டது.

.. மியூசிக் ..

இதனைத் தொடர்ந்து சுதந்திர தின உரையாற்றிய பிரதமர், ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் வீர தீரத்துடன் செயலாற்றிய வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதாக கூறினார்.

முப்படைகளின் ஆற்றல் மிகு துணிச்சல் இந்த வெற்றி எடுத்துரைத்ததாக பெருமிதம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் எல்லை பகுதியில் 100 கிலோமீட்டர் தூரத்திற்கு சென்று, தீவிரவாத முகாம்களை இந்திய படையினர் தகர்த்தெறிந்ததாக எடுத்துரைத்தார்.

அணுசக்தி அச்சுறுத்தலை இந்தியா சகித்துக் கொள்ளாது என்று கூறியஅவர், எதிரிகளின் அச்சுறுத்தலை தகர்க்க இந்தியா ஆற்றல்மிகு சுதர்ஷன் சக்ராவை பயன்படுத்தும் என்று எடுத்துரைத்தார்.

அடுத்த 10 ஆண்டுகளில் நம்நாட்டின் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும் என்றார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தின் முக்கிய அம்சமாக சுயசார்பு பாரதம் திகழ்கிறது என்று கூறியஅவர், பாதுகாப்பு, தொழில்நுட்பம், எரிசக்தி, விண்வெளி உற்பத்தி பிரிவில் இந்தியா விரைந்து முன்னேறி வருவதாக கூறினார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட திறன்மிகு ஆயுதங்கள் தேசபாதுகாப்பில் சிறப்பாக பங்காற்றுவதாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், இச்சுதந்திர தினத்தன்று ஒருலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இளைஞர்களுக்கு பயனளிக்கும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைக்கப்படுவதாக கூறினார்.

இதன்மூலம் புதிதாக பணியில் சேரும் இளைஞர்கள் மாதந்தோறும் 15 ஆயிரம் ரூபாய் பெறுவார்கள் என்றார்.

இந்த திட்டத்தின் கீழ் மூன்றரை கோடி இளையோர் பயன்பெறுவார்கள் என்றார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் மூலம் பொதுமக்களுக்கு புதிய வரிச்சலுகைகள் அளிக்கப்பட உள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

சரக்கு சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் குடிமக்களின் வரி சுமையை குறைக்கும் வகையில் இந்த புதிய திட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக கூறினார்.

தேசத்தின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், ஊடுருவலை தடுக்கும் வகையிலும் ஆற்றல்மிகு உயர்நிலை திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

நீர்வளங்களை கண்டறியும் வகையில் ஆழ்நிலை நீர் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்படும், சூரியசக்தி ஹைட்ரஜன் நீர்மின் அணு ஆற்றல் திட்டங்கள் விரிவுப்படுத்தப்படும் என்றார்.

நாட்டின் 100-வது சுதந்திர தினத்தின் போது தேசத்தின் அணுசக்தி 10 மடங்கு அதிகரிக்கப்பட்டு எரிசக்தியில் தன்னிறைவு பெறுவதோடு, நீடித்த வளர்ச்சிக்கு வகை செய்யப்படும் என்றும் கூறினார்.

செமி கண்டக்டர் பிரிவில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவின் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் புதிய தகடுகள் உருவாக்கப்படுவதோடு செயற்கை நுண்ணறிவு, சைபர்

பாதுகாப்பு, அதிநவீன தொழில்நுட்பங்களில் இந்தியா சிறப்புடன் முன்னேறி செல்லும் என்று எடுத்துரைத்தார்.

சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்று திரும்பியுள்ள குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லாவை பாராட்டிய பிரதமர், உள்நாட்டு விண்வெளி திட்டங்கள் செயல்படுத்தும் புதிய சகாப்தம் தொடங்கப்படும் என்றார்.

ககன்யான் விண்வெளி திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப் படுவதாக கூறியஅவர், இளைஞர்கள், பொறியாளர்கள் தொழில் பயிற்றுனர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் போர் ஜெட் விமானங்களுக்கான அதிநவீன தொழில்நுடபங்களை உருவாக்க வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த 100 ஆண்டுகளாக தேசத்திற்கு சேவையாற்றிய RSS தன்னார்வலர்களுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து இந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்கள் மற்றும் பள்ளி மாணாக்கருடன் பிரதமர் கலந்துரையாடினார்.

இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, மூவர்ண பலூன்கள் பறக்கவிட்டு சுதந்திர தின விழா செங்கோட்டையில் இனிதே நிறைவடைந்தது.

முன்னதாக பிரதமர் இன்றுகாலை ராஜ்காட்டில் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖❖

அமைச்சர்கள்

தலைநகர் டெல்லியில் அமைச்சர்கள் திரு. ராஜ்நதாத் சிங், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு. நிதின்கட்கரி, டாக்டர். ஜீதேந்திர சிங், மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா ஆகியோரின் இல்லங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டது.

டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நிகழ்த்திய உரையில் சுயசார்பு பாரதத்திற்கான வலுவான செய்தியை பறைசாற்றுவதாக வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

தடைகள் அனைத்தையும் தாண்டி நாட்டுமக்கள் எழுச்சியுடன் செயலாற்றுவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகாஜுன கார்கே, டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் தேசிய கொடியை இன்று ஏற்றினார்.

❖❖❖❖❖❖❖❖

எல். முருகன்

பிரதமர் திரு.நரேந்திரமோடி டெல்லி செங்கோட்டையில் 12-வது முறையாக தேசிய கொடி ஏற்றி சுதந்திர தின உரையாற்றியது பெருமைமிக்க தருணம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் பெருமிதம் தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த சாதனைகளின் கொண்டாட்டமாக சுதந்திர தினம் திகழ்கிறது என்றும் தமது சமூக வலைதளப்பதிவில் அமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள் முழுவீச்சில் நடைபெற்றன.

சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணி வணக்க மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

.. மியூசிக் ..

தொடர்ந்து கோட்டை கொத்தளத்தில் உரையாற்றிய முதலமைச்சர், தமிழ்நாட்டில் சுதந்திர போராட்ட தியாகிகளின் ஓய்வூதியம் 22 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 12 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

முன்னாள் படைவீரர்களுக்கான காக்கும் கரங்கள் திட்டம் வரும் 19-ம் தேதி தொடங்கப்படும்,

சென்னை மாதவரத்தில் முன்னாள் படைவீரர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டப்படும் உள்ளிட்ட 9 அறிவிப்புகளை முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரோ தலைவர் திரு. நாராயணனுக்கு டாக்டர் அப்துல்கலாம் விருது,

பேராசிரியர் திரு. காதர் மொய்தீனுக்கு தகைசால் தமிழர் விருது,

இறகுபந்து வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு கல்பனாசாவ்லா விருது உட்பட நல்ஆளுமை விருதுகளையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருச்சி ஆயுதப்படை மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தேசிய கொடியை ஏற்றிவைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

தூத்துக்குடியில் ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய 69 பேருக்கு சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் பதக்கங்களை அளித்தார்.

அரியலூரில் ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தேசிய கொடியை ஏற்றிவைத்து 53 பயனாளிகளுக்கு 2 கோடியே 64 லட்ச ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சுதந்திர தினவிழா தேசப்பற்றுடன் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருச்சி அகில இந்திய வானொலி நிலையம் உட்பட தமிழகத்தின் அனைத்து மத்திய மாநில அரசு அலுவலகங்களில் இன்று தேசிய கொடி ஏற்றப்பட்டது.

அனைத்து அலுவலகங்களும் மூவர்ண கொடிகளால் அலங்கரிப்பட்டுள்ளதோடு, வண்ண விளக்குகளால் ஒளிர்கின்றன.

நாடுமுழுவதும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் களை கட்டியுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

கிராமசபை கூட்டம்

சுதந்திர தினத்தை ஒட்டி தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

பொது நிதி செலவீனம், தணிக்கை அறிக்கை, தூய்மையான குடிநீர் விநியோகம் உறுதி செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

❖❖❖❖❖❖❖❖❖